வங்கியின் நிர்வாகக்குழு பாக்கிகளை வசூலிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. பாக்கிகள் வசூலிக்கப்படுவதை கவனித்துக் கொண்டிருக்கும்படியும், அவசியமானால் கணக்குகளைத் தணிக்கை செய்ய ஏற்பாடு செய்யும்படியும் திருநெல்வேலி கூட்டுப் பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, இந்த பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கியின் செயலாளர் வங்கிக்கு வரவேண்டியதாகிய ரூ. 15 ஆயிரம் கடனுக்கு ஜாமீனாக கொடுக்கப்பட்ட சொத்தை தன்னுடைய சகோதரி பெயரில் வாங்கி வைத்துக்கொண்டு வங்கிக்கே கடன் கொடுக்காமல் இருந்தார். பிறகு அந்த வங்கியின் பொதுக்குழு உறுப்பினன் என்ற நிலையில் நான் அதை எழுப்பிய பிறகு பாதி வட்டியைக் கழித்து அந்தக் கடனை வசூல் செய்வதாகச் செய்திருக்கிறார்கள். இதனால் வங்கிக்கு ரூ. 10 ஆயிரத்திற்கு மேல் பாக்கியிருக்கிறது. இதை அந்த நபரிடமிருந்து வசூல் செய்வதற்கு முடிவு செய்திருக்கிறோம். பொதுவாக கணக்குப்போடுவது என்பது சர்குலரிலேயே இருந்துவருவது ஊழல் செய்கிறவர்களுக்கு ஊக்கமூட்டுகிற மாதிரி இருக்கிறது. அந்த ஊழலில் உள்ள தொகையை தனி நபர்களிடமிருந்து வசூலிக்க உத்தரவு பிறப்பித்து கூட்டுறவு சங்கங்களில் இனிமேல் அதுபோன்ற ஊழல் நடவாமல் தடுக்க முயற்சி எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஊழல் செய்வதில் இரண்டு வகை உண்டு. அகப்பட்டுக்கொள்ளும்படி ஊழல் செய்துவிட்டால் உடனடியாகக் கண்டிபிடிக்க முடிகிறது. விதிகளுக்கு உட்பட்டு ஊழல்களைச் செய்தால், யார் அதற்குப் பொறுப்பாளி என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது. அவர், அதிலே பணியாற்றும் உறுப்பினர்களுக்கு வேண்டியவர்களுக்குச் சில சலுகைகள் அளித்து, அதுவும் விதிகளுக்கு உட்பட்டு செய்திருக்கிறார். அது கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் தொகை மட்டும் வசூலிக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொகை வசூலிக்க முடியாவிட்டால் நிச்சயமாக அதற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அத்தொகையை வசூலிக்க முயற்சி எடுக்கப்படும்.

Annanji Co-operative Society and Stores

*167 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) The amount misappropriated in the Annanji Co-operative Society–Co-operative Stores situated adjacent to Theni, Madurai district ;

(*b*) the amount recovered through court of law ;

(*c*) the result of the stay order issued by the High Court ; and

(*d*) whether the amount has been collected ?

அன்னஞ்சி கூட்டுறவு சொசைடி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை ஜில்லா, தேனியை அடுத்த அன்னஞ்சி கூட்டுறவு சொசைட்டி, கூட்டுறவு ஸ்டோரில் கையாடல் செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு வசூலான தொகை எவ்வளவு ?

(உ) உயர்நீதி மன்ற தடுப்பு ஆணை என்ன ஆனது ?

(எ) பணம் வசூலாகிவிட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) அன்னஞ்சி கூட்டுறவு சங்கத்தில் ரூ. 14,945·67-ம், சங்கத்தில் அன்னஞ்சியிலுள்ள ஊஞ்சாம்பட்டி கூட்டுறவு பண்டகசாலையில் ரூ. 3,410·81-ம் கையாடல் செய்யப்பட்டது.

(இ) (உ) & (எ) அன்னஞ்சி கூட்டுறவு சங்கத்தைப் பொறுத்த வரையில் பணமொன்றும் வசூலிக்கப்படவில்லை. கையாடப்பட்ட பணத்தை வசூலிக்கும் பொருட்டுத் தொடரப்பட்ட வழக்கில் பிறப்பிக்கப் பட்ட உத்தரவின் மீது செய்யப்பட்ட அப்பீலின் பேரில் இவ்வழக்கை மதுரை கூட்டுறவுச் சங்கங்களின் உபபதிவாளர் மறுவிசாரணை செய்யும்படி சென்னை உயர்நீதி மன்றம் ஆணையிட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தடுப்பு ஆணை தீர்ந்துவிட்டது.

ஊஞ்சாம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை சம்பந்தமாக வழக்குத் தொடரவில்லை. இப்பண்டகசாலையைக் கலைப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி (Liquidator) ரூ. 1,200-மட்டும் வசூல் செய்தார். இந்த பண்டகசாலை கலைக்கப்பட்டு விட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த ஊழல் காரணமாக அந்த ஊரில் கூட்டுறவு இலாகாவின் சங்கங்கள், சொசைட்டிகள் எதுவும் வேலை செய்யாமல், 5,000 பேர் கொண்ட அந்த ஊரில் ஒரு கூட்டுறவு சொசைட்டி கிடையாது. ஆகவே இதன் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து அந்த ரூபாயை வசூல் செய்து கொண்டு, அந்த ஊரில் மீண்டும் கூட்டுறவு இலாகா வேலை ஆரம்பித்து நடக்க சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவரவர்களே, இந்த ஊழல் 1953-ல் தொடங்கப்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் வரை பல நிலைகளில் பல கட்டங்களில் இது சென்று ஒரு வழக்கில் அவர்கள் தண்டிக்கப்பட்டு, மறுபடியும் மாவட்ட நீதி மன்றமும் அதை உறுதி செய்து, பின்னர் அப்பீலிலே தப்பித்துக் கொண்டு விட்டார்கள். பணத்தை வசூல் செய்வது, சொத்துக்களை சப்தி செய்வது என்ற வழியில் ஏற்பாடு செய்யப்பட்டது. இன்னொரு வழக்கில் இவ்வாறு சப்தி செய்ய சொத்து அல்லாத காரணத்தால் கிரிமினல் வழக்கு மட்டும் போடப்பட்டது. பணத்தை வசூல் செய்ய நடவடிக்கை எடுத்த பிறகு அதற்கும் அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குப் போய் விட்டார்கள். இப்போது மறு விசாரணை செய்ய வேண்டுமென்று திருப்பியனுப்பி யிருக்கிறார்கள். மறு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மறு விசாரணை என்றால் யார் செய்கிறார்கள் ? விசாரணை செய்யக் கூடிய ஆட்களையும் கைக்குள் போட்டுக் கொண்டு தங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளக் கூடிய ஆட்கள் இவர்கள். ஆகவே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இந்த நண்பர்களைப் பற்றிய அனுபவம் எனக்கில்லை. அங்கத்தினர் அவர்கள் கூறிய கருத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். கோர்ட்டில் இதை எந்த ஆர்பிட்ரேட்டர் விசாரித்தாரோ அவர்கள் உயர்நீதிமன்றத்தில் எழுப்பி சில அடிப் படையில் இது மறு விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லப் படுகிறது. மதுரை மாவட்ட ஆர்பிட்ரேட்டருக்கு இது அனுப்பப்பட்டிருக் கிறது.